செ.வெ.எண்: 63 நாள்: 27.09.2016

**பத்திரிகைச்செய்தி**

# இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம்

இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையம் திருச்சி மாவட்டம், முத்தரசநல்லூரில் 28.09.2016 மற்றும் 29.09.2016 ஆகிய இரண்டு நாட்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இத்திட்டத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளயிருப்பதால், வரும் 28.09.2016 மற்றும் 29.09.2016 (புதன் கிழமை மற்றும் வியாழக் கிழமை) ஆகிய இரண்டு நாட்களுக்கு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் நீரேற்றும் பணிகள் நிறுத்தப்படும். எனவே 29.09.2016 மற்றும் 30.09.2016 (வியாழக் கிழமை மற்றும் வெள்ளிக் கிழமை) ஆகிய இரு நாட்களுக்கு இந்த கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் பயன் பெறும் விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 17 குடியிருப்புகளுக்கும் , திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 10 குடியிருப்புகளுக்கும், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 5 குடியிருப்புகளுக்கும் மற்றும் பொன்னமராவதி பேரூராட்சிக்கும் குடிநீர் வழங்குவது தடைபடும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**